**Previous Examination date – 06.10.2025**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 279 of 2025**

**Deposition of Witness P.W.3**

| | |
|---|---|
| **Name : வேலுசாமி** | **Father/Husband's Name : முத்துசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 13.11.2025.**

**Accused(A3 in CC No.374-2010) absent. 317 Cr.P.C. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது காவலப்பட்டி தாயார் தோட்டத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 பழனியம்மாள் என்பவரை எனக்கு தெரியும். எதிரி தங்கம்மாள் என்பவரை எனக்கு தெரியும். சுமார் 5-6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரண்டு தரப்பினர்களுக்கிடையே பாதை பிரச்சனை இருந்தது என சண்டை போட்டு கூட்டமாக இருந்தார்கள், நான் வரும்போது பார்த்தேன். சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. கடந்த 10.04.2008ம் தேதி சுமார் 12.00 மணிக்கு நான் தோட்டத்தில் இருந்தபோது குமார் என்பவருக்கும், சின்னசாமி கவுண்டருக்கும் இடையே வண்டிபாதை பிரச்சனை இருந்தது எனவும், வண்டிபாதை பிரச்சனை சம்மந்தமாக எதிரிகள் அ.சா.1 தோட்டத்தில் இல்லாதபோது பயிர்களை சேதபடுத்தினார்கள் எனவும், தங்கம்மாள், விஜயா என்பவர்கள் அ.சா.1ஐ கீழே தள்ளி அடித்து தோட்டத்திற்குள் அத்துமீறி பயிர்களை சேதப்படுத்தினார்கள் எனவும், பின்னர் அரிவாளை காட்டி குமார், சிவா, தங்கவேல், விஜயா ஆகியோர்கள் அ.சா.1க்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் எனவும் போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு

ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

3. இல்லை.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.11.13 18:32:51 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date – 06.10.2025**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 279 of 2025**

**Deposition of Witness P.W.4**

| | |
|---|---|
| **Name : சீரங்கன்** | **Father/Husband's Name : ராமசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 13.11.2025.**

**Accused(A3 in CC No.374-2010) absent. 317 Cr.P.C. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது தும்பலபட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 11.04.2008ம் தேதி காலை 11.00 மணிக்கு நானும், சின்னபாண்டி என்பவரும் காவலப்பட்டி சின்னசாமி கவுண்டர் தோட்டத்தில் இருந்தபோது அங்கு வந்த போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், சின்னபாண்டி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது சின்னபாண்டி இறந்துவிட்டார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. சம்பவம் நடந்த சமயத்தில் நான் எங்கு குடியிருந்தேன் என்றால் தும்பலபட்டியில் குடியிருந்தேன். சம்பவம் கேள்விபட்டு மறுநாள் வந்தேன். நான் மறுநாள் சம்பவயிடத்திற்கு வந்தேனா என்றால் ஆமாம், காலை 11.00 மணிக்கு வந்தேன். என்னை யார் வர சொல்லி கூப்பிட்டார் என்றால் எனது மாமியார் இடத்தை எல்லாம் அடித்து உடைத்துவிட்டார்கள் என்று சொல்லி கூப்பிட்டார். மாமியார் சொல்லி தான் சாட்சி சொல்ல வந்தேனா என்றால் இல்லை. நான் எத்தனை மணிக்கு அங்கு வந்தேன் என்றால் காலை 11.00 மணி இருக்கும், வயல் அழிந்து கிடந்தது. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் கையொப்பம் செய்த பேப்பரில்

என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் பயிர் முழுவதும் அழிந்திருந்தது என்று எழுதியிருந்தது. அப்போது யார் யார் இருந்தோம் என்றால் நானும், சின்னபாண்டியும் இருந்தோம். காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் ஆமாம். எப்போது சென்றேன் என்றால் ஞாபகமில்லை. காவல் நிலையத்தில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஆமாம். காவல் நிலையத்தில் எத்தனை பேப்பரில் வாங்கினார்கள் என்றால் ஞாபகமில்லை. இரண்டு மூன்று பேப்பர்கள் இருக்குமா என்றால் இருக்கும். நான் கையொப்பம் செய்த பேப்பரில் வண்டி பாதை எவ்வளவு தூரம் சென்றது என்றால் 200 அடி இருக்கும். எவ்வளவு நேரம் அங்கு இருந்தேன் என்றால் 11.00 மணி முதல் 1.00 மணி வரை இருந்தேன். அந்த இடத்தை அளவீடு செய்தார்களா என்றால் இல்லை. நான் அந்த இடத்திற்கு செல்வதற்கு முன்பு போலிசார் அங்கு இருந்தார்களா என்றால் ஆமாம். அங்கு வரைபடம் வரைந்து கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஆமாம். பார்வை மகஜர் தயார் செய்த நேரத்தில் நான் அங்கு இல்லை என்றால் சரியல்ல. எனது மாமியார் அழைத்ததால் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.11.13 18:32:57 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date – 06.10.2025**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 279 of 2025**

**Deposition of Witness P.W.5**

| | |
|---|---|
| **Name : சேகர்** | **Father/Husband's Name : நாகப்பன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 13.11.2025.**

**Accused(A3 in CC No.374-2010) absent. 317 Cr.P.C. Petition filed and allowed.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சுக்கமநாயக்கன்பட்டி சமத்துவபுரத்தில் குடியிருந்து photographer ஆக வேலை செய்து வருகிறேன். கடந்த 11.04.2008ம் தேதி காலை சுமார் 10.30 -11.00 மணியளவில் தெற்கு தாதநாயக்கன்பட்டி வழக்கின் சம்பவயிடத்திற்கு சின்னசாமி என்பவர் அழைத்ததன்பேரில் சென்று Photo எடுத்தேன். நிலம், பயிர் சேதமானதையும், வண்டிபாதையும் photo எடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் தான் நான் எடுத்த புகைப்படங்கள். **6 புகைப்படங்கள் அ.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** தட்டை பயிறு விளைவித்திருந்தார்கள், அந்த சேதத்தை photo எடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

2. அந்த இடத்தில் வண்டிபாதை இருந்ததா என்றால் வண்டிபாதை, தட்டைபயிறு எல்லாம் இருந்தது. போலிசார் வாக்குமூலத்தில் வண்டிபாதையில் தட்டைபயிறு அழிமானத்தை photo எடுத்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வண்டிபாதைக்கு மேற்கு பக்கம் செங்குளம் வாய்க்கால் இருக்கிறது என்றால் சரிதான். அந்த வாய்க்காலை புகைப்படம் எடுத்தேனா என்றால் ஆமாம். அதை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேனா என்றால் ஆமாம். அதன் negativeஐ ஒப்படைத்தேனா என்றால் ஆமாம், ஞாபகமில்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.11.13 18:33:04 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.